DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 242/2015 PW : 2

Name : ரமேஷ் Age -

Father Name : Village -

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 06.01.2025.

2ம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

தாவா சொத்திற்கு செண்ட் ஒன்றுக்கு ரூ. 53,000 என 1ம் பிரதிவாதி விலை நிர்ணயம் செய்தது தொடர்பாக விலை நிர்ணயம் குறித்து 1ம் பிரதிவாதியிடம் நான் பேச்சுவார்த்தை நடத்தினேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி என்ன விலை நிர்ணயம் செய்தாரோ அதை நான் ஏற்றுக்கொண்டு தான் தாவா விக்கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டேன். விலை நிர்ணயம் எதன் அடிப்படையில் செய்தீர்கள் என்றால் சந்தை மதிப்பின் அடிப்படையில் தான் நிர்ணயம் செய்யப்பட்டது. பக்கத்து நிலங்களில் சந்தை மதிப்பை விசாரித்து விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. விலை நிர்ணயம் செய்த பிறகு தாவா சொத்து தொடர்பாக விக்கரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளலாம் என்று நான் தான் 1 ம் பிரதிவாதியை கேட்டேன். அதை 1ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டார். அவ்வாறு 1ம் பிரதிவாதி விக்கரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி தர எப்போது கேட்டேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதி விக்கரைய ஒப்பந்தம் என்னுடன் ஏற்படுத்தி கொள்வது தொடர்பாக 2ம் பிரதிவாதி அம்மணியம்மாளிடம் கேட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி விக்கரைய ஒப்பந்தம் என் பெயருக்கு எழுதி கொடுப்பதற்கு முன்பாக தாவா சொத்து தொடர்பாக 1ம் பிரதிவாதியுடன் விக்கரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ள போவதாக 2 ம் பிரதிவாதி அம்மணியம்மாளிடம் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. கிரைய ஒப்பந்தத்தில் கிரையத்திற்கான கால அவகாசம் நிர்ணயிக்கபட்டுள்ளதா என்றால் 6 மாதம் என நிர்ணயிக்கப்பட்டது. 6 மாத காலத்திற்குள் 1 ம் பிரதிவாதி தாவா சொத்து சம்பந்தமான நகல் ஆவணங்களை தருவதாக கூறினார். விலை நிர்ணயம்

செய்யும் போது சாட்சிகள் யாருமில்லை. கிரய உடன்படிக்கை எழுதும் போது சாட்சிகள் இருந்தார்கள், சாட்சிகளின் பெயர் விவரங்கள் எனக்கு ஞாபகமில்லை. 6 மாத காலத்திற்குள் தாவா சொத்து சம்பந்தமான நகல் ஆவணங்களை தருவதாக சொன்ன 1ம் பிரதிவாதியிடம் நான் எதாவது கேட்டேனா என்றால் வாய்மொழியாக பலமுறை கேட்டேன். வாய்மொழியை கேட்டும் அவர் தராததால் எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. கிரய உடன்படிக்கையில் உள்ள வாசகங்கள் 1ம் பிரதிவாதி சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. வாச.2 ஆவணதின் வரைவு ஆவணத்தை நான் படித்து பார்த்து பின்பு தான் வாச2 ஆவணம் தயார் செய்யப்பட்டது. வாச2 அசல் ஆவணத்தில் அடித்தல் திருத்தம் உள்ளது என்று சொன்னால் சரிதான். வாச2 கிரய உடன்படிக்கையில் நான் சொல்வது போல் கால அவகாசம் ஏதும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்குரையில் 5 ம் பத்தியில் கால நிர்ணயம் விக்கரைய ஒப்பந்தத்திற்கு அவசியமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விக்கரைய ஒப்பந்தம் எழுதிக்கொண்ட தினத்தன்று தாவா சொத்திற்கான முழு கிரய தொகையையும் செலுத்த நான் தாயராக இருந்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1 ம் பிரதிவாதிக்கு 21.09.2015 ம் தேதியன்று 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு எந்த விதமான வழக்கறிஞர் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய காலத்தில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வசா4 18.09.2015 தேதியிட்ட வில்லங்க சான்றிதழில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரம் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ரத்து பத்திரம் விவரம் 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய காலத்தில் எனக்கு தெரிந்தும் தெரியாது என தற்போது நீதிமன்றத்தில் தவறான தகவலை பதிவு செய்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு வங்கி கடன் வாங்கி தருவதாக சொல்லி தவறாக வழிக்காட்டி பொது அதிகார பத்திரம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா விக்கரைய

ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் தாவா சொத்தின் மதிப்பு செண்ட் ஒன்றுக்கு ரூபாய்.3,00,000 என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாவா சொத்து சம்பந்தமாக எந்த விதமான அசல் ஆவணங்களும் 1ம் பிரதிவாதி வசம் ஒப்படைக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, என்னிடம் எந்த அசல் ஆவணமும் ஒப்படைக்கபடவில்லை. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி உண்மையில் பொது அதிகாரம் பெற்ற முகவராக நியமித்து இருந்தால் 1ம் பிரதிவாதி சொத்திற்கான அசல் ஆவணம் மற்றும் பணப்பற்று ரசீது வைத்திருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் எவ்வித பணப்பற்று ரசீதையும் 1ம் பிரதிவாதி ஒப்படைக்கவில்லை. தாவா விக்கரைய ஒப்பந்தம் படி மிகுதி கிரைய தொகையை தாவா தாக்கல் செய்யும் போது நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா தாக்கல் செய்யும் போது தாவா விக்கரைய ஒப்பந்தம் படி மிகுதி கிரைய தொகையை செலுத்துவதற்காக தயாராக உள்ளேன் என்பதை காண்பிப்பதற்காக எனது தரப்பில் வங்கி ஸ்டேட்மென்ட் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு போதுமான பண வசதி எனக்கு இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியிடம் மோசடியாக பெற்ற பொது அதிகார ஆவணத்தை வைத்து நானும் 1ம் பிரதிவாதியும் மோசடியாக தாவா விக்கரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டும் என்றால் சரியல்ல. மோசடியான தாவா விக்கரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தில் பரிகாரம் கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

Sd/. M.A. Kabeer
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
திருவள்ளூர்,